www.Padasalai.Net www.CBSEtips.in

Reg. No

# அரையாண்டுப் பொதுத்தேர்வு - 2022

## எட்டாம் வகுப்பு

காலம் : 2.30 மணி

## தமிழ்

மதிப்பெண்கள்:100

### பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15 x 1 = 15

1. இயற்கையைப் போற்றுதல் தமிழ் ...........
அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு
2. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ...... காரணமாக அமைந்தது.
அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை
3. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் .........
அ) இ, ஈ ஆ) உ, ஊ இ) எ, ஏ ஈ) அ, ஆ
4. ஓடை + ஆட என்பதனைச் சேர்த்தெழுத கிடைக்கும் சொல் .....
அ) ஓடை ஆட ஆ) ஓடையட இ) ஓடையாட ஈ) ஓடைவாட
5. 'இன்னோசை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........
அ) இன்+ஓசை ஆ) இனி+ஓசை இ) இனிமை+ஓசை ஈ) இன்+னோசை
6. நீலகேசி கூறும் நோயின் வகைகள் ........
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து
7. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது .......... நீட்சியாகவே உள்ளது.
அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின் இ) உணவின் ஈ) வாழ்வின்
8. கற்றவருக்கு அழகு தருவது .....
அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி
9. முழவு+அதிர என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .........
அ) முழவதிர ஆ) முழவுதிர இ) முழவுவதிர ஈ) முழவு அதிர
10. சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் .......... தகுதி அறிந்து பேச வேண்டும்.
அ) சொல்லின் ஆ) அவையின் இ) பொருளின் ஈ) பாடலின்
11. சேரர்களின் தலைநகரம் ........
அ) காஞ்சி ஆ) வஞ்சி இ) தொண்டி ஈ) முசிறி
12. இந்த .......... முழுவதும் போற்றும்படி வாழ்வதே சிறந்த வாழ்வு.
அ) வையம் ஆ) வானம் இ) ஆழி ஈ) கானகம்
13. ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற இடம் ..........
அ) திருச்சி ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோவை
14. அறநெறியில் வாழ்பவர்கள் உயிரைக் கவர வரும் ............ க் கண்டு அஞ்ச மாட்டார்கள்.
அ) புலனை ஆ) அறனை இ) நமனை ஈ) பலனை
15. கல்வியோடு ............ கற்க வேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து.
அ) சிலம்பமும் ஆ) கைத்தொழிலும் இ) கணிப்பொறியும் ஈ) போர்த்தொழிலும்

II. கோடிட்ட இடத்தை நிரப்புக. 5 x 1 = 5

16. மாங்கனி நகரம் என்று அழைக்கப்படும் நகரம் ..........
17. புற உலக ஆராய்ச்சிக்கு ........... கொழுக்கொம்பு போன்றது.
18. அசை ............. வகைப்படும்.
19. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் .............
20. தொகைநிலைத் தொடர் ........ வகைப்படும்.

### பகுதி - ஆ

6 + 4 = 10

21. அ) வாழ்க நிரந்தரம் எனத் தொடங்கும்பாடலை அடிபிறழாமல் எழுதுக. (அல்லது)
ஆ) கற்றோர்க்கு ........... எனத் தொடங்கும் பாடலை எழுதுக.
22. அ) 'ஆற்றுதல்' எனத் தொடங்கும் பாடலை எழுதுக. (அல்லது)
ஆ) ஒன்றே குலமும் ..... எனத் தொடங்கும் பாடலை எழுதுக.
23. 'அக்காரம்' எனத் தொடங்கும் குறளை எழுதுக.
'...' என முடியும் குறளை எழுதுக.

REDMI A1 16/12/2022 19

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com
CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in

8–தமி

### பகுதி – இ

9 x 2 = 18

25. சான்றோர்க்கு அழகாவது எது?
26. உலகம் எவற்றால் ஆனது?
27. தமிழ் எங்கு புகழ்கொண்டு வாழ்கிறது?
28. ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் குறிப்பிடுகிறார்?
29. நீலகேசியில் பிறவித் துன்பத்தை தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை?
30. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?
31. யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?
32. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?
33. உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?
34. மக்கள் ஊரைவிட்டு வெளியேறக் காரணம் என்ன?
35. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?
36. கலிங்க வீரர்கள் எவ்வாறு அஞ்சி ஓடினர்?
37. கொல்லிமலை பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது?

### பகுதி – ஈ

3 x 3 = 9

38. வியங்கோல் வினைமுற்று விகுதிகள் யாவை?
39. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?
40. மரக்கட்டில் – இச்சொல்லைப் பிரித்து எழுதிப் புணர்ச்சியை விளக்குக.
41. வேற்றுமையில் வல்லினம் மிகும் இடங்கள் இரண்டினை எழுதுக.
42. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

### பகுதி – உ

4 x 4 = 16

43. புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும் கருத்துகள் யாவை?
44. உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
45. அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?
46. மூங்கிலால் செய்யப்படும் பொருகள் குறித்து எழுதுக.
47. அறிவியல் கல்வி பற்றித் திரு. வி.க. கூறுவன யாவை?
48. மழையின்மையால் செடிகள் வாடிய நிலையை விளக்குக.

### பகுதி – ஊ

4 x 2 = 8

49. கலைச்சொற்கள் தருக. 1) Milets 2) Vowel
50. சரியான மரபு சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
    1) கோழி ......... (கூவும் / கொக்கரிக்கும்) 2) பால் .......... (பருகு/உண்)
51. பொருத்தமான சொல்லுருபு இட்டு எழுதுக. (ஆக, உடன், காட்டிலும்)
    1) இடி ........... மழை வந்தது. 2) தமிழைக் ........... சுவையான மொழியுண்டோ!
52. தமிழெண்களாக எழுதுக.
    1) உலக ஓசோன் நாள் செப்டம்பர் 16 ..........
    2) உலக இயற்கைநாள் அக்டோபர் 3 ..........
53. சரியான இணைச் சொற்களை இட்டு நிரப்புக
    (மேடுபள்ளம், ஆடி அசைந்து, ஈடு இணை)
    1) திருவிழாவில் யானை ........... வந்தது.
    2) ஆற்று வெள்ளம் ............ பாராமல் ஓடியது.
54. மரபுத் தொடரைத் தொடரில் அமைத்து எழுதுக. 'முதலைக்கண்ணீர்'
55. இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக.
    மழை நன்கு பெய்தது. எங்களால் விளையாட முடியவில்லை.

### பகுதி – எ

2 x 6 = 12

56. அ) வெட்டுக்கிளியும் சருகுமானும் – இக்கதையைச் சுருக்கி எழுதுக.
    ஆ) இசைக்கருவிகள் குறித்து நீவிர் அறிந்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.
57. அ) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.
    ஆ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

### பகுதி – ஏ

1 x 7 = 7

58. அ) நான் விரும்பும் கவிஞர் (அல்லது)
    ஆ) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் – முன்னுரை – நோய் வரக் காரணங்கள் – நோய் தீர்க்கும் வழிமுறைகள் – வருமுன் காத்தல் – உணவும் மருந்தும் – உடற்பயிற்சியின் தேவை – முடிவுரை

REDMI A1

CamScanner